ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர், B.A.

அவர்களின்

அன்பளிப்பு

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

பொதுதர்ம

# சத்கீதமஞ்சரி

அன்பளிப்பு

அ மாதவையர்

இயற்றியது

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜு

கனம். ப்ரும்மஸ்ரீ

## சேஷகிரி ஐயரவர்கள்

எழுதிய முகவுரையுடன்

மதுரைத் தமிழ்ச்சங்கம் பிரஸில் அச்சிட்டு

சென்னை திருவல்லிக்கேணி

ஸ்ரீநிவாஸவரதாசாரி அண்டு கம்பெனியாரால்

பிரசுரஞ் செய்யப்பட்டது

All Rights Reserved] 1914 [விலை 4 அணா.

# பொருள் அடக்கம்.

---


முகவுரை—சென்னை ஹைகோர்ட் ஜட்ஜு கனம் ப்ரும்மஸ்ரீ சேஷகிரி ஐயரவர்கள் எழுதியது.

முன்னுரை.

| | | |
|---|---|---|
| I. | அருட்சோதி* | பக்கம் 1 |
| II. | வாழ்க்கைநெறி | 1 |
| III. | தாய்நாடு | 2 |
| | ஷை அநுபந்தம்* | 12 |
| IV. | அடிமைகள்* | 13 |
| V. | முறையீடு* | 13 |
| VI. | தாய்நாட்டு வணக்கம் | 14 |
| VII. | ஊக்கமே ஆக்கம்* | 15 |
| VIII. | இந்தியக்கும்மி | 16 |
| IX. | மெய்த்துறவு* | 23 |
| X. | அம்மே! | 24 |
| XI. | விண்ணப்பம்* | 27 |
| XII. | மெய்ப்பெருமை* | 28 |
| XIII. | மெய் உயர்வு* | 28 |
| XIV. | மாருத கீதம்* | 29 |
| XV. | இந்தியச்சிந்து | 30 |
| XVI. | ஊக்கமதுகைவிடேல்* | 34 |
| XVII. | திருக்குறள் மஞ்சரி | 35 |
| XVIII. | தாய்நாட்டுவணக்கம் | 42 |
| XIX. | வாழ்க்கை மாண்பு* | 44 |
| XX. | நல்லது கூறல்* | 45 |
| XXI. | விண்ணப்பப்பதிகம்* | 46 |
| XXII. | வாழ்த்து | 48 |


*இவ்வடுக்குறியிட்டுள்ள கீதங்கள் ஆங்கிலத்தினின்றும் பெயர்த்தமைத்துக் கொள்ளப்பட்டவை.

அணிந்துரை

# FOREWORD.

I owe an apology to Mr. Madhaviah for the delay in responding to his request to say a few words by way of preface to this publication. I was at first disinclined to undertake the task, because I felt that these songs should be introduced to the public by one who can lay a better claim to scholarship in Tamil than I can. However, Mr. Madhaviah insists upon my writing the foreword: I would recommend a study of this book to all those who say that the Tamil language is not capable of being adapted to popularise modern ideas: The songs relate to a variety of topics—civic life, patriotism, industrial development, marriage reform, elevation of the depressed classes etc. The general line along which poetic thought has progressed in this country relates to religion, morals, and love. Mr. Madhaviah's attempt to bring home to the public the ideas which are discussed on the platform and in the public print is worthy of the highest commendation. There are adaptations from *Gitanjali*, Scott's *Poems*, the *Psalm of life*, *The Light of Asia* etc. The importance of the collection consists in the fact that they deal with topics which have not hitherto appealed to Tamil Poets, and which have an intimate bearing upon the daily lives of men and women To our womankind the poems have a special interest: On festive occasions they will be enabled to sing them in addition to the devotional verses which are so numerous in this country. They will thus acquire a knowledge of subjects which are agitating the world of thought in this country. I commend the book heartily. I hope it will find its way into every household in Southern India.

**T. V. SESHAGIRI AIYAR.**

(1916)

# முகவுரை.*

* * * நவீனநாகரீகச் சார்பான கருத்துக்களைச் சாதாரண ஜனங்களுக்கு எடுத்தோத இடந்தராது தமிழ்ப்பாஷை, என்று கூறும் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாசிப்பாராக. இதிலுள்ள பாட்டுக்கள், நாகரீகவாழ்க்கை, சுதேசாபிமானம், தொழில் அபிவிருத்தி, விவாகச்சீர்திருத்தம், 'கீழ்சாதி' யாரைமேம்படுத்துதல் முதலிய பல்வேறு விஷயங்களைத் தழுவியுள்ளன. தெய்வபக்தி, நல்லொழுக்கம், காதல், இவ்வழிகளிலேயே இந்நாட்டுக்காவியங்கள் இதுகாறும் பெரும்பாலும் சிறந்துவிளங்குவ. ஜனசங்கங்களிலும் பத்திரிகைகளிலும் ஆராயப்படும் பொதுதர்ம விஷயங்களை இவ்வாறு நம்மவர்க்கு ப்ரும்மஸ்ரீ மாதவையர் எடுத்துரைக்கும் முயற்சி மிகவும் பாராட்டி மெய்ச்சத்தக்கது. கீதாஞ்சலி முதலிய பேர்போன ஆங்கில கிரந்தங்களினின்றும் பெயர்த்தமைத்துக்கொள்ளப்பட்ட பாக்களை ஈண்டுக்காணலாம். இதுகாறும் தமிழ்க்கவிகளால் பாடப்பெறுதனவும் ஸ்திரீ புருஷரது தினசரி வாழ்க்கையைச் சார்ந்துள்ளனவுமான விஷயங்களையே இக்கீதங்கள் பொருளாகக்கொண்டிருப்பது முக்கியமாய்க் கவனிக்கற்பாலது. இப்பாட்டுக்களை நமது பெண்பாலார் மிகவும் உரிமைபாராட்டுதற்குரியர்: விசேஷ தினங்களில், இந்நாட்டில் மலிந்துள்ள பக்திரஸமான கீதங்களுடன் இவற்றையும் அவர்கள் பாடுதல் பொருந்தும்; அங்ஙனம் பாடுவதால், இப்பொழுது மேதாவிகளால் ஆழ்ந்து சிந்திக்கப்படும் பல விஷயங்களையும் பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகம் நம்மவர்யாவராலும் பாராட்டற்குரியதென்பது திண்ணம்; தென் இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் இது நடைபெற்று வழங்குமென்று நான் நம்புகிறேன்.

---

* சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜு கனம். ப்ரும்மஸ்ரீ சேஷகிரி ஐயரவர்கள் இங்கிலீஷில் எழுதிய முகவுரையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

அன்பளிப்பு

## முன்னுரை.

‘சாதாரண ஜனங்கள் பாடும் நாடோடிப் பாட்டுக்களை உண்டு பண்ணுஞ் சுதந்தரமட்டும் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், அந்நாட்டுச்சட்டதிட்டங்களை நியமிப்பவர் யாரென்று, அவன், கவனிக்க வேண்டியதில்லை’, என்பது ஆங்கிலேய மேதாவி ஒருவர் வாக்கு. அவ்விதப் பாட்டுக்கள், ஜனங்களின் மனப்போக்கு நடபடிக்கைகளை மேலாடி வசீகரித்துத் தம்கருத்தின் வழிப்படுத்தவல்லன என்பது அவர் குறிப்பு. சிங்காரரசமும் பக்திரசமும் செறிந்துள்ள பாட்டுக்கள், தமிழராகிய நமக்குள், அமோகமாயுள; நாடுநகர மடாலய ஜன சமூகப் பொது தர்மங்களைக்கூறும் கீதங்களோ, நரிக்கொம்பே. பொது நன்மைக்காக உழைத்துவரும் எனது நண்பர் ப்ருமஸ்ரீ S. V. விசுவநாதையர், இக்குறையை நீக்கக்கருதி: இந்தியாவின் அருமை பெருமைகளையும்; சாமான்ய கல்வியும கைத்தொழில்களாதிய தற்கால நாகரீகங்களும் தழைத்து, நாம் அபிவிருத்தியடைதற்கான சாதனங்களையும் பற்றி, எளியநடையில், யாவர்க்கும்பயன்படும் வண்ணம் இயற்றப்படும் தமிழ்ப்பாட்டுக்களுக்கு, இரானடே, கோக்கலே என்னும் தேசாபிமானிகள் பேரில் ரூ 300 வரைப் பரிசுகள் கொடுப்பதாகப் பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்தார் அவ்விளம்பரப்படி வந்த கீதங்களில், இப்புத்தகத்திலுள்ள இந்தியக் கும்மி, தக்கமத்தியஸ்தர்களால் இரானடேதலைப்பரிசு அளிக்கப்பட்டது; பாட்டுமுழுதும் ஒரேமெட்டிலிருத்தலினும், பலவர்ணமெட்டுக்களிலிருப்பது நலமென்று, பரிசுதவுவோரும் மதிப்பாளிகளும் வெளியிட்ட அபிப்பிராயத்தை அனுசரித்து, அதையே, சிறிது விரித்தும் சுருக்கியும், இதிலுள்ள தாய்நாடு என்னும் பாட்டாகச் செய்தேன். இந்தியச்சிந்து, அம்மே!, தாய்நாட்டு வணக்கம், என்னும் கீதங்களும் அதேசந்தர்ப்பத்தில இயற்றப் பட்டனவே.

இவ்வாறு தமிழ்நாட்டு நாடோடி மெட்டுக்களிற் கவனஞ் செய்யும் இடைகளில், ஆங்கில பாஷையிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் அருமையான சிலபாக்களையும் பெயர்த்தமைத்துக் கொள்ள நேர்ந்தது. தமிழ்நாட்டார்க்குப் பயன்படுமென் றெண்ணியே, அவற்றையுஞ்சேர்த்து வெளியிடலாயிற்று. சாதாரண ஜனங்களுக்கென்றே பெரும்பாலும் உண்டாக்கப்பட்ட இச் சத்கீதமஞ்சரி நம் தமிழ்நாட்டில் ஊர்தோறும், வீடுதோறும், நறுமணம்வீசி, ஆண் பெண் இருபாலாராலும் மகிழ்ந்து கொண்டாடப்பட வேண்டுமென்பது எம் உள்ளத்தழைப்பு. எம் அபிலாஷையில் ஒரு சிறிதுமேனிறைவேறினும், எமக்குத் தக்ககைம்மாறுவதுமன்றி, இன்னும் இவ்வழியில் மேற்செலுத்தும் தூண்டுகோலுமாம்.

அ. மாதவையர்.

## பொது தர்ம

# சத்கீத மஞ்சரி.

### 1. அருட்சோதி*

["பித்தா பிறைசூடி" என்னும் தேவார மெட்டு.]

(1) நீயேயெனை ஏலாய், நெறி உதவாய், அருட்சோதி!
ஓயாதிருள் வழியெங்கணும், வீடும் உயர்தூரம்;
போயின் வழி பொருந்தும் எதும் முன்காணியவேண்டேன்;
நாயேன் ஒருஅடிபேரவும் நயந்தாலுமே நன்றே!

(2) மேனாள்களில் இவ்வாறிலை; வேண்டா துனைதருளை,
நானேவழி தெரிவேனென நயந்தேன் நலம் தீதே;
தானாயுறும் பயமென்னினும், தளராதகங் காரம்;
போநாள்களை மறந்தே, அவை பொறுத்தின்றெனை ஆளாய்!

(3) இது காறுமே அளித்தாய்; இனிஅருள்வாயென நினைவேன்;
பொதியா விருளூடே, புனல், குழி, மேடுகள், புதராம்,
வதியாவுமே கடந்தே, இரவொழிந்தே, மனமகிழ்ந்தே,
கதியாயுனை அடையும் வரை, காவாயெனை நீயே!

### 2. வாழ்க்கைநெறி.

[தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.]

பல்லவி

உன்னி உழைத்திடு வோமே—இனித்
தந்நயம் ஒன்றே கருதல் தவிர்ந்து—(உன்னி)

(1) தஞ்சம் கடவுளே யாக—பிர
, பஞ்சம் படைத்தவர் நாமிலை யாக,

---

* Adapted from Cardinal Newman's "*Lead, Kindly light*"

வஞ்சனை யின்றி மனத்தில்,—ஏதும்
அஞ்சலு மின்றி, அவரவர்க் கேன்ற—(உன்னி)

(2) வித்தை விதைக்க உரியோம்;—விளை
வெத்திற னுருமோ ஏதும் தெரியோம்;
தத்தம் கடமை புரிவோம்;—பலன்
அத்தனுக் கர்ப்பணம் என்றே, அகத்தே—(உன்னி)

(3) தப்பினும் தாழ்வில்லை யாமே,—மனம்
ஒப்பிட ஓயா துழைத்திடு வோமேல்
மெய்ப்புக ழும்விளை வாமே;—மனம்
பொய்ப்ப தொன் றேபுகழ் போக்கிடும் என்றே— (உன்னி)

(4) சிற்றறி வோரெதும் தேரோம்:—இவண்
உற்றதென்? ஒய்வதென்? ஒன்றுமே ஓரோம்;
எத்தெய்வ மும்எதிர் நேரோம்;—எனின்
தத்தம சித்தத் தகுதிப் படிக்கே— (உன்னி)

(5) ஏது பலனுமே யாக;—அந்த
ஆதியின் உட்கருத் தியாது மே யாக,
ஓதி புணர்ந்த உளத்தில்—தோன்றும்
கோதில்லா நீதிநெறியே குறிப்பாய்— (உன்னி)

## 3. தாய்நாடு.

[“ முத்திநெறி ” என்னும் திருவாசக மெட்டு.]

(1) பூதேவி ஜோதிமுகம்
ஈதெனலாம் மாதர்*இந்த்யா *அழகிய
மாதே ! என் னுது*முடி *என்னுடைய
மீதணிந்துன் பாதமலர்;

(2) ஆதியிலுன் மாதவர்கள்
மேதையும்;இப் போதினில், நீ
மேதக*மாம் வீதமுமே *மேன்மை
ஆதரவாய் ஓதுவெனே!

(3) பூமகனார்* காமுகராம் *ப்ரும்மா
நாமகளே! பாமகிழ் யான்
பூ*மகிழும் மாமறையோர் *பூமியோர்
நாமகுலம் ஆம்மகனும்,

(4) தாய்மையில்,என் வாய்மொழியா,
தாய்மகிமை நீமொழிவாய்,
தேன்மதுரம் பான்மதுரம்
தான்முதிரும் தென்மொழியே!

(5) முன்னவர்கள் துன்னும் இசை
உன்னதமே என்ன எழும்
மன்னிமயம் அன்னபல
கன்னல் வளம்* பன்னரிதே! *மலைகளின்நல்வளம்

(6) தந்தம், உயர் க்யாதிபெறும்
சந்தனம், பல் சாதிமரம்,
கந்தம், இல வங்கம், என
தந்திடும், அனந்தவளம்!

(7) பொன்கொழித்து, புனல் சுழித்து,
பொங்குமுப்போ கம்செழித்தே,
எங்களுக்க கங்களிக்க,
நன்களிக்கும் நதிநதமே!

(8) கங்கை, ஸிந்து, காவேரி,
துங்கபத்ரா, தூயவைகை,
பொங்குக்ருஷ்ணை, பொருநை,*என, *தாமிரவருணி
எங்கும்நதி கங்கிலவே!

(9) முத்தினினம், நற்பவளம்,
கத்துசங்கு, நத்தைகள், மீன்,
ஒத்து, வளம் தத்தும்அலை,
முத்திசையும் மொத்திடுமே!

(10) வில்கவினும்* நல்மணியும், *ஒளிஅழகுசெய்யும்
அல்கலிலா† ஐம்பொன்களும், †குறைவில்லா
பல்கனிகள்‡ நல்கலினால் ‡சுரங்கங்கள்
வெல்கு வளம் மல்கும்*நிலம் *நிறையும்

(11) செந்நெல்வளம், கன்னல்*வளம், *கரும்பு
தந்நிகரில் தான்யவளம்,
தென்னை, பனை, என்னபல
துன்னிவளம் மன்னும்நிலம்!

வேறு:—கும்மி மெட்டு.

(12) வேத, புராண, இதிகாசங்கள், விஞ்சை
மேவு கிரந்தங்கள், காவியங்கள்,
ஆதியில் ஓதி உணர்த்திய அற்புதம்,
ஆறுமதங்கள், கலைவளமே!

(13) காசி, ப்ரயாகை, கயா, மதுரை, பூரி,
காஞ்சி, அருணை, அரங்கம், இரா
மேசுரம், வேங்கடம், தில்லை, நெல்லை, புண்யம்
மேவு பதிகளோர் ஆயிரமே!

(14) ஒப்பில் கவீந்திரர், உத்தம வித்தகர்,
உக்கிர வீரர், உயர் சீலர்,
தப்பில் தவத்தினர், தர்ம சொரூபமே
தாங்கிய தையலார் ஆயிரரே!

(15) கோயில், மடம், குளம், சத்திரம், சாலைகள்,
கோபுரம், தூபிகள், கோடியவே!
தாய் அவள் இந்தியா போலிசை தாங்கும்
தலமும் வேறுண்டோ தரணியிலே?

(16) போனவர் கீர்த்தி நமதாமோ? பிறர்
போசனத் தால், நம் பசிபோமோ?
வானுயர் மாட்சி அவரது; பின்னுற
வந்துள தாழ்ச்சியே நம்மது வே!

(17) முன்னவர் காலமெலாம் போச்சே; நமை
மூடின சோர்வு, பழி, ஏச்சே;
அன்னையும் ஏக்கம் உறலாச்சே; இனி
ஆண்மையும் ஆமோ வெறும் பேச்சே?

(18) கர்மம், பிராரத்துவம் என்று நாளைக்
கழிப்பது மூடத் தனமாமே;
மர்மம் அறிந்தால், முயற்சி தெய்வத்தினும்
வல்லதே என்றுமே ஆகிடுமே!

(19) சாதி மதமெனும் சாதக பாதகம்
சற்றும் இலாது,நம் தாய்பணியில்
ஓதிடும் பக்தி தழைத்தினி, ஒற்றுமை
ஊக்கமும் ஓங்க உழைத்திடுவோம்!

(20) சூது வாதுகள் மறந்திடு வோம்; இனிச்
சோம்பலை முற்றும் துறந்திடுவோம்;
வேதிய ரேவழி காட்டிடுவோம்; வசை
வீட்டிடு வோம்; இசை நாட்டிடுவோம்!

(21) வங்கர், தமிழர், மராட்டியர், ஆந்திரர்,
மகம தீயர், மலையாளர்,
கொங்கர் என்னுமலே இந்தியர் யாரையும்
கொண்டிடு வோம்நம் சகோதரராய்!

(22) பள்ளுப் பறையரும் இந்தியரே! உயர்
பார்ஸிப் ரபுக்களும் இந்தியரே!
துள்ளு துருக்கரும் இந்தியரே! கிறிஸ்
துவர், சமணரும் இந்தியரே!

(23) பாரும்! எல்லாரும் மணமொருப் பட்டிடும்;
பல்துளியே பெரு வெள்ளமெலாம்;
வாரும், நம் அன்னை மகிழ்ந்து சிறந்திட,
மண்ணில் உயர்ந்திடப் பண்ணுவமே. [கும்மி]

வேறு: ["மாதேயசோதையே" என்னும் சிந்து மெட்டு.]

(24) வாரும், நம் அன்னையை, இந்தியத் தாயினை
வாழ்த்தி வணங்கிடு வோமே!—அவள்
சீரை நினைந்து, நம் சிந்தையில், நாவினில்,
செய்கையிற் செய்திடு வோமே!

(25) ஒற்றுமை இன்றியே வெற்றி தருவதும்
உண்மையில் இன்றெனப் பேணும்;—இதைக்
கற்றறி மேலையர், ஒற்றுமை யால் உல
காண்டு வருவதைக் காணும்!

(26) 'கல்வியில் லானிரு கண்ணுமில் லான்' எனும்,
கற்றறி வள்ளுவர் கூற்றை—எண்ணிச்
செல்வர், மடாலய கர்த்தர்கள், தேசம்
செழித்திடக் கல்வியே போற்றும்!

(27) கல்வி எல்லார்க்கும் சுதந்தர மாகக்
கடவுள் அருளிய ஆக்கம்;—அதிற்
செல்வர் தரித்திரர், ஆண் பெண், கீழ்மேலெனச்
செப்பிடும் பேதங்கள் நீக்கும்:

(28) பாதியில், மார்பினில், நாவினில், மாதரைப்
பன்னு மும்மூர்த்திகள் தாங்கி—வரும்
நீதி நினைந்து,நம் மாதர் குறைகளை
நீக்கி, மகிழ்ந்திசை ஓங்கும்.

(29) பெண்களை இன்றிப் புகழ் பெறுதல், நொண்டி
பெற்றிடும் கொம்புத்தே னுமே!—இரு
கண்களில் ஒன்று கலங்கவே, மற்றதும்
புண்படல் கண்டிடு வோமே!

(30) 'உழுது பிழைப்பவர் வாழ்பவர்; மற்றோர்
தொழுதவர் பின் செல்வோர்', என்றே—புகல்
பழுதில் சொல்விட்டுநம் பள்ளுப் பறையைப்
பழித்துச் சதித்திடல் நன்றோ?

(31) யார்க்குமே கல்வியை அன்றிக் கதியிலே:
எங்குமே சென்றுநீர் பாரும்:—இந்தப்
பார்க்குளே பெண்களும் மாஜனம் யாரும்
படித்திலா நாடுகள் சேரும்.

(32) ஆதலின், மாதரும், ஏழைகளும், இனி
யாருமே கல்வி தழைக்க—நன்கு
ஓதலே அன்றியே உத்தம மார்க்கமும்
உண்டோ சொல்லும்நாம் பிழைக்க.

(33) தாயின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறும் கல்வி தழைப்போர்,—இனி
நாமும் உயர்ந்திட, நம்மவர் யார்க்குமே
நல்லறி வூட்ட உழைப்போம்.

(34) வேறுள பாஷைகள் தேறியுள்ளீர்! மிக
மேன்மை பயன்தரும் நூலை—நாமும்
பேறுபெறும் படி, நம்மொழி தன்னிலே
பேர்த்திடலே நம்ம வேலை.

(35) யாரும் இகழுவர் ஏழைகளைப், பொருள்
யாது பகையும் அறுக்கும்—அதைச்
சேரும் வழிகளைச், சென்றுபல் நாடுகள்
தேர்ந்திடின், தேசம் சிறக்கும்.

(36) துய்ய பருத்திகள், பட்டுக்கள், சாயங்கள்,
தோன்றித் துலங்கும் இந்நாடு—அவை
நெய்து பல்லாடைகள் விற்றுச் செழித்து
நிறைவது மற்றொரு நாடு;

(37) கொட்டை முத்து, வெல்லம், கோதுமை யாவுமே
கொண்டு கொடுப்பதிந் நாடு—அவை
அட்டு நமக்கெண்ணெய், சீனிமாவாக
அளிப்பது மற்றொரு நாடு;

(38) தோல்கள் அனுப்பும் இந்நாடு, பதனிட்டுத்
தோற்பைகள் செய்யுமோர் நாடு;—எனின்
நால்வகை யாலுமே கூலியும் லாபமும்
நாளும் இழக்கும்இந் நாடே!

(39) வெண்ணெய் கொடுத்துப், பணங்கொடுத்துப், பிறர்
மேன்மையாய் விற்கும் நெய்வாங்கும்—இந்தக்
கண்மூடிக் காரியம் விட்டினி வைத்திடும்
கைத்தொழிற் சாலைகள் ஈங்கும்.

(40) பண்டே, இப் பாருல கெங்கும் பரவிடப்
பல்வகைக் கைவினை கண்ட—முன்னோர்
கொண்ட உதிரமே கொண்டவர் நாம்; ப்ரும்ம
வித்தை கொள் புத்தியும் உண்டே!

(41) நாளும் நமக்குறும் நோய்களின் ஏதுவை
நாடியே நன்கு நீர் பாரும்—ஒரு
கோளில்லைப் பேயில்லை, கர்மமில்லை, நம்
குருட்டுத் தனங்களே தேரும்.

(42) கூடென ஆன்மாக் குலவிடும் தேகம் ஓர்
கோயிலென் றெண்ணியே பேணின்,—நம்ம
வீடுகள், வீதிகள், ஊர்கள் சுசியாய்
விளக்கின், வியாதிகள் நாணும்;

(43) ஆறு, குளம், கிணறாதிய யாவும்
அசுத்தங்கள் என்று முறுமே—கெட்ட
சேறுகள் நாறுதலின்றியே தண்ணீர்
சிறக்கின் பிணிகளும் போமே

(44) ஈக்கள் கொசுக்கள் இருந்து பெருகிட
எங்கும், எந்நீருமே தேக்கம்—இன்றி
ஆக்கி மனைகளை, ஊர்களைக் காப்பதே
ஆயிரம் நோய்களைப் போக்கும்.

(45) கோவில் மடங்கள் அநேகமுள; அவை
கொண்டுள சொத்தும் அமோகம்;—இனித்
தேவ நம்பிக்கை இலாமையினால், அவை
சீமை சிரித்திட லாகும் :

(46) காசே கடவுள் அவ் வேசையர்க்கே, அவர்
காட்டிடும் ஆசாபாசத்தைக்—கொண்டு,
பூசையிலும் அவர் போந்திட விட்டிடல்,
புத்தியில்லாத அசத்தே.

(47) தீர்த்தம் திரைகள் தமக்கே முதலென்றும்,
தேவ சொத்துத் தங்கள் சொத்தே—என்றும்,
பார்த்திட யாரும், பகற்பறி கொண்டிடும்
பாதகரோ தர்ம கர்த்தர்!

(48) பக்தி தழைக்க, மெய்ஞ்ஞானம் தழைக்கப்,
பரத்தைய ரும்பழி நீங்கப்—பல
யுக்திகள் செய்யின், மடாலய வேலைகள்
யோக்கியமாகவே ஓங்கும்.

(49) கேடு விளைக்கும் வழக்கங்கள் தம்மைக்
கெடுத்து, நலமே அடுப்போம்;—நம்ம
நாடு, நகர, சமுதாய வேலைகள்
நன்மை யுறவே தொடுப்போம்.

(50) ஆளும் துரைகளைக் கொண்டு, நம் கீழ்மை
அகற்றியே ஆண்மை சிறப்போம்;—இனிக்
கோளும், கொடுமையும், சோம்பலும் மற்றுள
குற்றங்கள் யாவும் குறைப்போம்.

(51) பொய், மது, சூது, களவிழி காமம்,
பொறாமை, புறங்கூறல் போக்கும்;—உயர்
மெய்ம்மையும், ஆண்மையும், தன்மரியாதையும்,
மேட்டிமை கொள்ளவே ஆக்கும்.

(52) பொம்மை விவாகம், ஆண் பெண்களை விற்குதல்,
புத்தியில் டம்பம் பொறாமை,—இளம்,
கைம்மையர் தம்துயர், சாதிவிரோதம், இக்
கஷ்டமெலாம் அறியாமை.

(53) ஏழுங்யா யஸ்தலம் ஏறி எதிரிட்டே
எந்த வழக்கையும் கூடி—வெறும்
பாழுக் கிறைத்துப் பதைத்திடாமல், குடிப்
பஞ்சாயத்தாரையே நாடும்.

(54) நாங்கொடுக் கும்வரிக் கொண்டு, நமக்கு
நலங் கொடுத்தற் கென்றே நாளும்—கூலி
வாங்கும் உத்யோகஸ்தர் கட்கினி லஞ்சமும்
ஏன் கொடுக் கின்றீர்கள் மீள?

(55) ‘மந்திரம் கால், மதிமுக்கால்’ என்றும், வல்ல
‘சோஸியன் வீட்டுக் கைம் பெண்’ணே—என்றும்
வந்திடும் மூதுரை தேரும்; அவைகளில்
வைக்கும் பிரமையும் வீணே.

(56) காய பலமும், கடவுள் அருளிய
புத்தியும் கையிலிருக்க—வீணில்,
மாயமாம் ஜோஸியம், மந்திரமென்றே
மயங்கின் உலகம் சிரிக்கும்.

(57) பிச்சை எடுத்தும், பிறரை அடுத்தும்,
கெடுத்தும் பிழைப்பதே ஈனம்—சுய
இச்சையில் எத்தொழி லேனும் இயற்றிப்
பிழைப்பதுவே பகுமானம்.

(58) தாதா, இரானடே, ராமோஹன் ராய், கந்தி,
தாகூர், போஸ், கோக்லே, நௌரோஜி—உயர்
மேதாவி மார்கள் அடிவழிப் பட்டினி
மேன்மை விளக்குதல் நீதி.

(59) நம்மை யலாது நமக்கு விரோதிகள்
நாட்டினில் யாருளர் காட்டும்;—இழி
பொய்ம்மை மயக்கமும் ஏக்கமும் முற்றிலும்
போக்கிப் புகழையே நாட்டும். [வாரும்]

வேறு—கும்மி மெட்டு.

(60) 'ஐயகோ! ஏழை என் செய்வதென்றே', அவ
மாயிருப் போய்! ஒரு கோழையோ நீ?
பொய்கள வின்றி உன் கைகளாலானவை
பொற்புறச் செய்து புகழடையே!

(61) மோட்டார், வண்டி, குதிரை, பல் லாக்கெனும்
மோகத்தில் மூழ்கிடும் முட்டாளே!
கோட்டான் போற்பணம் காப்பவனே! அவை
கூடவருமோநீ போம் பொழுதே?

(62) மாதா, பிதா, மனை, மக்கள், என்றே உன்தன்
வாழ்வை மகிழ்ந்ததில் ஆழ்பவனே!
ஏதுமே மானமில் லாதவனோ? அவை
என்னநம் அன்னையினும் பெரிதோ?

(63) பொய்யுடம்பே இது; மெய்யுடம்போபுகழ்;
பொன்னைப் பொதிந்தவனே இழந்தான்;
மெய்யி தறிந்து, நம் அன்னை பணிகளில்
மிக்க புகழையே மேவிடுவீர்.

(64) நீட்டிட வேண்டாம், மழிக்க வேண்டாம் முடி;
நிர்வாணம், காவியுடை வேண்டாம்;
நாட்டி மனத்தினைப், புந்தியை நன்மையில்,
நம்மனம் ஒப்ப நடப்போமேல்.

(65) தத்தமால் என்றவை நித்தமும் செய்து,
சகோதர வாஞ்சை தழைத்துறவே,
உத்தம மாதுரு பக்தி துலக்கி,
உழைத்தலே மெய்ப்புகழா கிடுமே.

(66) வாழி, எம் அன்னையே! வாழி, எம் இந்தியா
மாது சிரோமணி வாழியவே!
ஊழி வரை, எமதாருயிர் யாவுமே
உன்னதே காணினி, வாழியவே!

## அநுபந்தம். *

வேறு— ["பாளைவாய்க்கமுகு" என்னும் சிந்து மெட்டு.]

(i) 'இந்தநாடென் சொந்தநாடே, என்தனையே தந்தநாடே',
என்றுமகிழ் நெஞ்சிலென்றும் எண்ணிலா—ஒரு
வன்றனையும் கண்டதுண்டோ கண்ணிலே?

(ii) அந்நியமாம் நாடுபல துன்னி,அலை பின்னர், நல்ல
அன்னை நாடு துன்ன அடி கொள்ளவும்—அதை
உன்னிமகிழ் துள்ளிடாதோ உள்ளமே?

(iii) அன்னஒரு வன்னுளனேல், சின்னஅவன் தன்மைதேரும்:
அன்புகொண்ட வன்புகழ்கள் ஆர்க்கவே—கவி
இன்பின்அவன் தன்னைஏத்தப் பார்க்கிலீர்!

(iv) பட்டப்பேர்கள் பெற்றபோதும்,மூட்டச்சீர்கள் முற்றுபோதும்,
மட்டில்அதி காரமுற்ற போதுமே,—தன
திட்டமொன்றே சூழும்அந்தப் பாதகன்,

(v) வாழ்விலே,நற் பேரிழந்து, பாழிலுயிர் தான்அழிந்து;
வீழ்கையில், உதித்தவண்ண மாகவே—அந்தக்
கீழ்மகன்தான் மண்ணொடு மண்ணுகுமே!

(vi) பேர்பெரிதும், சீர்பெரிதும், ஓர்சிறிதும், பாரிலின்றி,
நீர்பெருகும் ஓர்விழியும் இன்றியே,—கவி
சேர்புகழ், கண்யங்களின்றிப் பொன்றுமே!

* Adapted from Scott's "*Breathes there the man with soul so dead*"

## IV "அடிமைகள்" *

[தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.]

**பல்லவி.**

*அடிமைகள் அன்றியே வேறோ?—மனம்*
*ஆறஅறிந்ததை அஞ்சுவராயின்—* (அடிமை)

**சரணங்கள்.**

(1) *தம்நிலை தாழ்ந்துள மக்கள்,—சற்றும்*
*தம்வலி யின்றித் தவித்திடும் மக்கள்,*
*தங்களுக் காகவே தாங்கிப்—பேசும்*
*தைரிய மில்லாத பேடிகள் தாமும்—* (அடிமை)

(2) *நெஞ்சறி உண்மையைக் கூறின்—நேரும்*
*நிந்தனை, புன்சொல், நிஷ்டூரங்களாதிச்*
*சஞ்சலம் என்று பயந்து,—தக்க*
*மந்திரம் என்று வாய்மூடி யிருப்போர்—* (அடிமை)

(3) *இரண்டொருத் தரென எண்ணி,—உண்மை*
*கொண்டவர் பக்கமே கொண்டிடல் விட்டு,*
*கண்ட பெயர்களை அஞ்சி,—மனம்*
*கண்டதோர் உண்மை கரந்திடுவோர்கள்—* (அடிமை)

## V முறை யீடு.†

[தாண்டகம்]

(1) *"நாமேதும் பயமில்லேம் மனத்தினுள்ளே; நம்தலைகள்*
*நிமிர்ந்தேம்; நல்லறி வெல்லார்க்கும்*
*ஏமமுறப் பொதுவாகும், எளிதுமாகும்; எம் குடும்பம்,*
*எம்உறவோர், எனவே பேணி,*

* Adapted from Lowell's lines:—"*They are Slaves &c*"
† Adapted from *Gitanjili.*

"சேமவுயிர் வாழ்க்கையினைச் சிறுமை செய்யேம்;
செப்பெதுவும் செறிந்துண்மை திகழ்வதாக
வேமொழிவேம்; இடைவிடாதுழைப்பேம், ஏற்றம்
இவ்வுலகில் எதிருயர்வின் றெய்துமாறே.

(2) "புந்தியெனும் தெள்ளாறு நல்லாறோடிப்
புகழ்படையாதிழிந்து, பொதுவழக்க மென்னும்
சிந்தைசிதை பயங்கரமாம் பாலைசேர்ந்து
தீயவிடேம்; சிறிதுசிறிதா, மென்மேலும்,
சந்ததமும், எங்கள் மனம், செயல்கள், நாளும்
தழைத்தோங்கும் உனதருளால்"; என்றே மாப்பாய்
இந்தியர்கள் மகிழ்ந்துரைக்கும் பதவியெய்த,
எந்தாய்! நீ அருள்கவென இறைஞ்சினேனே.

## VI தாய்நாட்டு வணக்கம்.

[தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.]

பல்லவி.

மாதாவை வாழ்த்துவம் வாரும்,—அவள்
பாதார விந்தம் பணிகுவம் வாரும்! (மாதாவை)

சரணங்கள்.

(1) சாதிக் கொதிப்புத் தணிந்து,—நற்ச
கோதர நீர்மையே கொண்டு குளிர்ந்து,
மாதுரு பக்தி மலர்ந்து,—மனம்
ஆதிய அர்ப்பணம் தந்து, நம் இந்தியா— (மாதாவை)

(2) ஓயாதே ஒற்றுமை ஊக்கம்,—இனிச்
சாயாதே நெஞ்சம், தளராதே ஆக்கம்,
ஏயாதே சோம்பிழி தூக்கம்,—என்றே
வாயார நெஞ்சாரக் கூறிமகிழ்ந்து— (மாதாவை)

(3) சேயுறு திபத்தர் ஈண்டு—வந்தே
ஆயிரம் நன்மை துலங்கிட ஆண்டு,
நேயமும் ஞாயமும் நீண்டு,—நிகழ்
நாயகம், நாதன் செயலெனக் கண்டு— (மாதாவை)

(4) ஆங்கிலர் ஆரியர்காணும்,—அவர்
ஈங்குற, இந்திய ராகவே பேணும்;
பாங்குறு சோதரம் நாடி;—மனம்
ஓங்கி, எல்லாரும் ஒரோவழிக்கூடி— (மாதாவை)

## VII ஊக்கமே ஆக்கம். *

### விருத்தம்.

(1) 'வெட்டுக் காயங்கள் உற்றும் விடாமலே
வீரப் போர்விளைத் தெய்த்தும் பயனில்லை ;
துட்டத் தெவ்வர் * தொலைந்த பாடில்லை; ஓர்
சொற்பமும் வலிசோரவே இல்லையே!
முட்டி மோதிய ஆண்மை, முயற்சிகள்,
முற்றுமே அவமே; இதன் முன்னமே
தொட்டிருக்குமோர் வண்ணமே, யாவுமே
தோற்றுமே'; எனச் சோர்ந்திடு மாந்தரே!

(2) நீர் நினைத்த நன் றெய்திலிர் என்னினும்,
நீர் பயந்த கேடும் இலதாகலாம்;
காரிரும் புகை மூடுறும் ஆங்கது
கழறும் இக்கணமே, பிறசோதரர்
பேர்கொள் வெற்றி பெறுதலும் ஆகலாம் ;
பின்னர் உம்மதிவ் ஏக்கமும் என்னவாம்?
சோர்வை யன்றியே, மேற்செல வேதுமே
துலங்கிடா தொழியாதிவண் மோதுறும்,

* Adapted from A. H. Clough's "*Say not the struggle not availeth*"
* பகைவர்.

(3) அலைகள்,மற் றோரிடத்திற் பலவழி
யாகமேவி அசாத்திய வெள்ளமாம்
இலகு கீழ்திசைச் சாளரம் மட்டுமோ
எய்த ஞாயிறிலங் கொளி செய்வதும்?
பலகதி ரோன் பயப்பய ஏறவே,
பாருமின், சூட பானுமே ஜோதியாம்!
உலக வாழ்க்கையில், உண்மையிதோருமின்:
ஊக்க மின்றியோர் ஆக்கமுமில்லையே.

## VIII இந்தியக் கும்மி.$

(1) கும்மியடி பெண்ணே
கும்மியடி, மனம்
குளிர்ந்து, மகிழ்ந்து கும்மியடி:
நம்மவர் நன்மையை,
இந்தியா அம்மையை,
நாடிக் கும்மி அடியுங்கோடி!-புகழ்
பாடிக் கும்மி அடி யுங்கோடி!

(2) பூமா தேவி முகம் போலும், இந்தப்
புண்ணிய நாட்டுக் கும்மிபாட,
நாமகள்! நல்லதமிழ்தரு வாய்; என்தன்
நாவினில் வந்து நடம்புரிவாய்!

(3) முந்திய கீர்த்தித் திரள்என, மோடுற
மோதும் இமாலயம் ஆதியன,
சந்தனம், தந்தம், லவங்கம், முதலிய
சர்வ மலைவளம் தந்திடுமே!

(4) கங்கை, யமுனை, கோ தாவிரி, நர்மதை,
காவேரி, தாமிர வர்ணி, ஸிந்து,
துங்கபத் ரா,ப்ரும்ம புத்ரா, க்ருஷ்ணை, வைகை,
தூயநதிவளம் சொல்லரிதே.

---

$ முகவுரையிற் கூறியபடி, "இராநடே தலைப்பரிசு" பெற்ற பாட்டிது.

(5) ஆணிமுத் தும்,பவ ளம்,சங்கு, மச்சமோ
டாயிரம் ஆகும் அலைவளமே!
மாணிக்கம் ஆதிமணிகளும், ஐம்பொன்னும்,
மற்றுள யாவும் நிலவளமே!

(6) வேத, புராண, இதிகாசங்கள், வித்தை
மேவு கிரந்தங்கள், காவியங்கள்,
ஆதியில் ஓதி உணர்த்திய மாட்சிமை,
ஆறுமதங்கள், கலைவளமே!

(7) காசி, ப்ரயாகை, கயா, மதுரை, பூரி,
காஞ்சி, அருணை, அரங்கம், இரா
மேசுரம், வேங்கடம், தில்லை, நெல்லை, புண்யம்
மேவு பதிகளோர் ஆயிரமே!

(8) ஒப்பில் கவீந்திரர், உத்தம வித்தகர்,
உக்கிர வீரர், உயர் சீலர்,
தப்பில் தவத்தினர், தர்ம சொரூபமே
தாங்கிய தையலார், ஆயிரரே!

(9) கோயில், மடம், குளம், சத்திரம், சாலைகள்,
கோபுரம், தூபிகள், கோடியவே!
தாய் அவள் இந்தியா போலிசை தாங்கும்
தலமும் வேறுண்டோ தரணியிலே?

(10) போனவர் கீர்த்தி நமதாமோ? பிறர்
போசனத் தால், நம் பசிபோமோ?
வானுயர் மாட்சி அவரது; பின்னுற
வந்துள தாழ்ச்சியே நம்மதுவே!

(11) முன்னவர் காலமெலாம் போச்சே; நமை
மூடின சோர்வு, பழி, ஏச்சே;
• அன்னையும் ஏக்கம் உறலாச்சே; இனி
ஆண்மையும் ஆமோ வெறும் பேச்சே?

(12) கர்மம், பிராரத்துவம் என்று நாளைக்
கழிப்பது மூடத் தனமேயாம்;
மர்மம் அறிந்தால், முயற்சி தெய்வத்தினும்
வல்லதே என்றுமே ஆகிடுமே!

(13) சாதி மதமெனும் சாதக பாதகம்
சற்றும் இலாது,நம் தாய்பணியில்
ஓதிடும் பக்தி தழைத்தினி, ஒற்றுமை,
ஊக்கம் சிறக்க உழைத்திடுவோம்!

(14) சூது வாதுகள் மறந்திடுவோம்; இனிச்
சோம்பலை முற்றும் துறந்திடுவோம்;
வேதிய ரேவழி காட்டிடுவோம்; வசை
வீட்டிடுவோம்; இசை நாட்டிடுவோம்!

(15) வங்கர், தமிழர், மராட்டியர், ஆந்திரர்,
மகமதியர், மலையாளர்,
கொங்கர் எனுமற், சகோதரராகவே
இந்தியர் யாரையும் கொண்டிடுவோம்!

(16) பள்ளுப் பறையரும் இந்தியரே! உயர்
பார்ஸிப் ரபுக்களும் இந்தியரே!
துள்ளு துருக்கரும் இந்தியரே! கிறிஸ்
துவர், சமணரும் இந்தியரே!

(17) கல்வி இல்லான் இரு கண்ணுமில் லான் எனக்,
கற்ற புலவர் கழறிடலால்,
செல்வர், மடாலய கர்த்தர்கள், தேசம்
செழித்திடக் கல்வி விதைத்திடுவோம்

(18) யாருமே நன்கு படித்திடுவோம்; மட
வாரையும் நன்கு பயிற்றிடுவோம்;
சீரும் பெருமையும் நாடிடுவோம்; இசை
தேடிடுவோம்; வசிகூடிடுவோம்!

(19) யாரும் இகழுவர் ஏழைகளைப்; பொருள்
யாது பகையும் அறுத்திடுமால்;
தேரும் அதைப்பல தேசங்கள் சென்றுமே
தேடும் வழிகள் தெளிந்திடுவோம்!

(20) கைத்தொழிற் சாலைகள் வைத்திடுவோம்; பல
கஷ்டமுற்றும், அவை கற்றிடுவோம்;
மெய்த் தொழில் மேவி உழைத்து, நம்மூளை
வியர்த்து, நம் தாயை உயர்த்திடுவோம்!

(21) துய்ய பருத்திகள், பட்டுக்கள், சாயங்கள்,
தோன்றித் துலங்குவதிந் நாடாம்;
நெய்து, பல்லாடைகள் விற்றுச், செழித்து
நிறைவது மற்றுமொரு நாடாம்!

(22) கொட்டை முத்து, வெல்லம், கோதுமை யாதிய
கொண்டு கொடுப்பதும் இந்நாடாம் ;
மற்றுநமக் கெண்ணெய், சீனி, மா, ஆதிய
வந்து விலை செய்வதோர் நாடாம்!

(23) தோல்கள் அனுப்புவ திந்நாடாம், பதன்
இட்டுத் தொழில் செய்வதோர் நாடாம்!
நால்வகை நல்மரம் இந்நாடாம் நல்ல
நாற்காலி, மேஜைகள் ஓர்நாடாம்!

(24) வெண்ணெய் கொடுத்துப், பணங்கொடுத்துப், பிறர்
மேன்மையாய் விற்கும் நெய்கொள்ளுவமோ?
கண்ணிழந் தோரிற் கலங்குவமோ? இனிக்
கைத்தொழில் நாமுமே கற்றிடுவோம்.

(25) பண்டே,இப் பாருல கெங்கும் பரவிடப்
பல்வகைக் கைவினை வல்ல முன்னோர்
கொண்ட உதிரமே கொண்டவர் நாம்; ப்ரும்ம
வித்தையும் சொண்ட மதியுமுண்டே!

(26) கேடுவிளைக்கும் வழக்கங்கள் தம்மைக்
கெடுத்து, நலமே அடுத்திடுவோம்;
நாடு, நகர, மடாலய வேலைகள்
நன்மையுறவே நடத்திடுவோம்!

(27) ஆளும்துரைகளைக் கொண்டு,நம் கீழ்மை
அகற்றியே, ஆண்மை சிறந்திடுவோம்;
கோளும், கொடுமையும், சோம்பலு மாதிய
குற்றங்கள் யாவும் குறைந்திடுவோம்!

(28) பொய், மது,சூது, களா,விழிகாமம்,
பொறாமை, புறங்கூறல் போக்கிடுவோம்!
மெய்மையும், ஆண்மையும், தன்மரியாதையும்
மேன்மை சிறக்கவே ஆக்கிடுவோம்!

(29) 'மந்திரம்கால் மதிமுக்கால்' என்றும், வல்ல
'சோவியன் வீட்டு விதவை' என்றும்,
வந்திடும் வாசகம் எண்ணிடுவோம், மதி
மோசம் போகாமல், மடந்தையரே!

(30) பொம்மை விவாகம், ஆண்பெண்களை விற்குதல்,
புத்தியில் டம்பம், புகலரிய
கைம்மையர் கஷ்டங்கள், ஆதிய நம்முளே
காணுங் குறைகளை நாணுவமே!

(31) ஏழூர்யா யஸ்தலம் ஏறி இகலியே
எந்த வழக்கும் தொடராமல்,
பாழுக் கிறைத்துப் பதையாமல், நல்ல
பஞ்சாயத் தாரையே வைத்திடுவோம்!

(32) நாங் கொடுக் கும்வரிக் கொண்டு, நமக்கு
நலங் கொடுத்தற்கென்றே சம்பளமும்
வாங்கும் பல்ரையும் தாங்கியே, லஞ்சமும்
ஏன் கொடுப் போமினி, மாதரசே!

(33) கோவில், மசூதி அநேகமுள, அவை
கொண்டுள சொத்தும் அமோகமுள;
தேவ நம்பிக்கை சிறிது முண்டேல், அவை
சீமை சிரிக்கவே செய்குவமோ!

(34) காசே கடவுள், அவ்வேசையர்க்கே; அவர்
ஆசாபாசங்கள் கருதியே நாம்,
பூசையிலும் அவர் போந்திட, மற்றவர்
சீ! சீ! என்றேசிடப் போற்றுவமோ!

(35) தீர்த்தம், திரைகள், தமக்கு முதல் என்றும்,
தேவசொத் தெல்லாம் தமதென்றும்,
பார்த்தும் பாராமலும் கொள்ளை யடித்திடும்
பாதகரும் தர்ம கர்த்தர்களோ!

(36) பக்திதழைக்க, மெய்ஞ்ஞானம் தழைக்கப்,
பரத்தையரும் பழி நீங்கிடவே,
யுக்திகள் செய்து, மடாலய வேலைகள்
யோக்கிய மாக நடத்திடுவோம்!

(37) நாடி நமையுறும் வியாதிகளின், நிஜ
ஏதுவை நாடிடின், ஓர்சுடலை
மாடன் இல்லை; ஒரு மாரி இல்லை; நம்ம
மூடத்தனங்களே, மானிடரே!

(38) கூடென ஆன்மாக் குலவிடும் தேகம், ஓர்
கோயில் என்றெண்ணி ஒழுகுவமேல்,
வீடுகள், வீதிகள், ஊர்கள், சுசியாய்
விளங்கிடின் வியாதிகள், ஓடிடுமே!

(39) ஆறு, குளம், கிணறுதிய, யாதும்
அசுத்தங்கள் என்றும் அணுகாமல்,
சேறுகள் நாறுதலின்றிப் புனிதம்
சிறந்திடின் நோய்கள் பறந்திடுமே!

(40) ஈக்கள், கொசுக்கள், இருந்து பெருகிட
எங்கும், எந்நீருமே தேக்கமின்றி
ஆக்கி மனைகளை, ஊர்களைக் காத்திடின்
வீக்கு பிணிகளும் போக்குறுமே!

(41) 'ஐயகோ! ஏழை என்செய்வ தென்றே', அவ
மாயிருப்போய்! ஒரு கோழையோ நீ?
பொய், களவின்றி, உன்கைகளாலானவை
பொற்புறச் செய்து புகழுடையே!

(42) பிச்சை எடுத்தும், பிறர் தயவாலும்
பிழைக்கும் பிழைப்பே வசையாகும்;
இச்சையில் எத்தொழி லேனும் இயற்றியே
இன்புறல் என்றும் இசையாமே.

(43) மோட்டார், வண்டி, குதிரை, பல்லாக்கெனும்
மோகத்தில் மூழ்கிடும் முட்டாளே!
கோட்டான் போற்பணம் காப்பவனே! அவை
கூடவருமோ நீ போம் பொழுதே?

(44) மாதா, பிதா, மனை, மக்களென்றே, உன்தன்
வாழ்வை மகிழ்ந்ததில் ஆழ்பவனே!
ஏதுமே மானம் இல்லாதவனோ? அவை
என்ன, நம் அன்னையினும் பெரிதோ?

(45) பொய் உடம்பே இது; மெய்உடம்போ புகழ்;
பொன்னைப் பொதிந்தவனே இழந்தான்;
மெய்யிதறிந்து, நம் அன்னைபணிகளில்
விடில் புகழையும் தேடிக்கொள்வீர்!

(46) தாமின் புறுவதுலகின் புறக்கண்டு
காமுறும் கல்வி தழைத்தவரே!
நாமும் உயர்ந்திட, நம்மவர் யார்க்குமே
நல்லறி வூட்டுதல் நம்கடனே!

(47) வேறுள பாஷைகள் தேறியுள்ளீர்! மிக
மேன்மை, பயன் தரும் நூல்களெலாம்,
பேறுபெறும்படி நம்மொழி தன்னிலும்
பேர்த்திடுவீர், தமிழ் போற்றிடுவீர்!

(48) தத்தமால் என்றவை நித்தமும் செய்து
சகோதரவாஞ்சை தழைத்துறவே,
உத்தம மாதரு பக்தி துலக்கி
உழைத்தலே மெய்த்துற வாகிடுமே!

(49) நீட்டிடவேண்டாம்; மழிக்கவேண்டாம் முடி ;
நிர்வாணம், காவியுடை வேண்டாம்;
நாட்டி மனத்தினைப் புந்தியை நன்மையில்
நம்மனம் ஒப்ப நடப்போமேல்!

(50) பாரும்! எல்லாரும் மனமொருப் பட்டிடும்;
பல்துளியே பெரு வெள்ளம் எல்லாம்;
வாரும், நம்அன்னை மகிழ்ந்து சிறந்திட,
மண்ணில் உயர்ந்திடப் பண்ணுவமே!

(51) வாழி, எம்அன்னையே! வாழி, எம்இந்தியா
மாது சிரோமணி வாழியவே!
ஊழிவரை, எமதுா னுயிர் யாவுமே
உன்னதே காணினி, வாழியவே!

---

## IX. மெய்த்துறவு. *

[“பொன்னார் மேனியனே,” என்னும் தேவார மெட்டு.]

(1) மூங்கி நீராடி, முடிமுற்றும் முதிர்சடையாய்,
அங்கம் எங்கணுமே திருநீறின் அலங்கரித்தே,
செங்கண் மூடியுற, செபமாலை கரந்திகழ,
மங்கை பாகனையே மனனஞ்செயும் மானுடனே!

(2) திறவாய் உன் விழிகள்: ஒரு தெய்வமும் ஈங்கிலையே!
அறவே ஈதொழித்தே, அவமாயுயிர் போகாமே,
துறவே சீலமெனும் துகளெண்ண மெலாந்துறந்தே,
உறவோர் மாந்தரெலாம் எனவுன்னி உழைப்பாயே!

(3) நீயோ முக்தி கொள்வாய்? நிகழ் லோகங்கள் யாவினுமே,
ஓயா தோர்கணமும், ஒளிர்சோதி யுணர்ந்திலையே!
தாயாய் அப்பொருளே சகமெங்கும் தழைத்திடவும்,
பேயே! நீஎவனோ உழையாதஇப் பெற்றியுமே?

(4) கழுதை குங்குமமோ, கழிமண்ணோ சுமந்திடல் போல்,
இழிவே, ஏற்றமதே, எனவேதுமே எண்ணுமே,
விழுப்பம் மேதினியோர் மென்மேலுமுற உழைப்போர்
தொழுவோரே! அவர்க்கே துலங்குற்றிடும் சோதியுமே!

---

## X அம்மே!

[வர்ணமெட்டு:—"மார்கழிமாதம் திருவாதிரைநாள்."]

பல்லவி.

"வந்தனம் தாயே!" என்றே பாடுவம்
மகிழ்வாய் உனை, அம்மே;
சிந்தையில் நாவினில் செய்கையில், உன்புகழ்
தேடுவோமினி அம்மே!

கண்ணிகள்.

(1) இந்தியர்க்குள் ஜாதி மதகர்ம பேதங்கள்
ஏதுமிலாதம்மே,
தந்தை, தாய், தெய்வம் நீயே, உனையல்லாமல்
தாரகமேதம்மே?
மேதினியெங்கும், அஞ் ஞானமே ஆதியில்
மேவினபோதம்மே;

வேதவேதாந்தசித் தாந்தம் விசாரித்த
வித்தகர்யார் அம்மே?
மேகம் அளாவிய பல பெருமலை வளம்
மேவினை நீ அம்மே;
மோகமுத்தொடுபவ ளம் முதல் அலைவளம்
மோதினை நீ அம்மே;
ஆயிரங்கால்களில் ஓடிவளம் தரும்
ஆறுகள் உண்டம்மே;
தாயெனும் தன்மையில் உணவுகள் தரும்நிலப்
பேறுகள் உண்டம்மே;
கண்ணும் கருத்தும் உடலும் என்பும் மகிழ்
காட்சிகள் உண்டம்மே;
மண்ணெங்கும் எண்ணும் எழுத்தும் உதவிய
மாட்சியு முண்டம்மே;
புண்ய பூமியில் நம் முன்னோர்புகழ் புகல்
சாட்சியும் உண்டம்மே;
ஒண்ணுமிப்பொழுது நாம் நண்ணிய தாழ்ச்சிக் கத்
தாக்ஷியும் உண்டம்மே! (வந்த)

(2) கொங்கு, தெலுங்கு, நறுந்தமிழென்று
கொதித்திடோமினி அம்மே;
வங்கர், கலிங்கர், மராட்டியரென்று
மதித்திடோமினி அம்மே;
வேதியர் ஆதிய ஜாதிவிரோதம்
விதித்திடோமினி அம்மே
பேதமையால் மதம் என்றுபிதற்றியே
சதித்திடோமினி அம்மே
ஜோதியின் மேனியில் மாதொரு பாதியில்
தோன்றுவதால் அம்மே,
பேதைமை கீழ்மை அ கற்றியே மாதரைப்

பேணுவமால் அம்மே;
புத்தியிலார்க்கொரு சித்தியுமே இலை;
பொய்யோகாண் அம்மே?
வித்தை யெலார்க்குமே நித்திய சொத்திதும்
மெய்யேகாண் அம்மே?
ஆதலின், செல்வ ம டாலயம் எங்குமே
ஆர்க்கும்படி, அம்மே,
ஓதுங்கலை,தொழில் சாலைகள் வைத்தினி
உழைத்திடுவோம் அம்மே;
ஊக்கம் முயற்சியோ டொற்றுமையின்றி, ஓர்
பாக்கியம் ஏதம்மே?
மேக்குறு நாட்டவர் ஆக்குறு மேன்மைகள்
சாக்கியமே, அம்மே! (வந்த)

(3) தாதா, ரானடே, போஸ், நவரோஜி,
தாகூர், காந்தி, அம்மே;
போதாரோ எமை நல்வழி புகுத்திடப்
புண்ணியமாந்தர், அம்மே?
செல்வர், மேதாவிகள், அன்னவர் போலவே
திகழ்வோமினி, அம்மே;
எல்லவரும் பொய் ஆதிய தீயன
இகழ்வோமினி, அம்மே;
மனமொழி மெய்மலை மாசுகள் கழுவல், யா
வர்க்கும் எளிதம்மே;
உனைநினைந்துன் புகழ்க் கொப்புற ஒழுகல், எல்
லோர்க்கும் எளிதம்மே;
உத்தம வழிகளில் தத்தமக்கேன்றவா
றுழைத்திடுவோம், அம்மே;
சத்தியும், சுத்தியும், பத்தியும், சீலமும்,
தழைத்திடுவோம் அம்மே;

பழையன கழிதலும், புதியன புகுதலும்,
பாரூர்முறை, அம்மே;
வழிமுறை வந்தன இழிதரின் ஒழிவதால்
வருமோகுறை, அம்மே?
பழைவினை, தலைவிதி, எனப்பல பிதற்றியே,
பாழாகோம், அம்மே!
பழிவினை அன்றியே, பயப்படோம் ஒன்றுமே,
பாராயினி அம்மே! (வந்த)

---

## XI. விண்ணப்பம்*

[“பித்தா பிறைசூடி” என்னும் தேவார மெட்டு]

(1) என்பேரருள் ஈசா! உனை யான் வேண்டுவ திதுவே:
வன்பார் மன வறுமைதனை வேரோடற மடித்தே,
இன்பம், துன்பம், எதையும் எளிதேற்கும் இகல் அருள்வாய்!
உன்பால் எனதன்பிற் பிறர்க்குழைக்கும் திறன் அருள்வாய்!

(2) இல்லாரை யான் என்றும் எமரன்றென்னவே இகழா,
வல்லார் இறுமாந்தோர் முனம் வணங்கா, உரம் அருள்வாய்!
ஒல்லாது$ளம் நாடோடிய உழப்பில், அதை உயர்த்தே,
வல்லே †மகிழ்ந்தெனை உன்பர மாக்கும் வலி அருள்வாய்!

---

* Adapted from *Gitânjali*.

$ பொருந்தாது. † சீக்கிரம்.

## XII. மெய்ப்பெருமை.*

["பொன்னார் மேனியனே," என்னும் தேவாரமெட்டு.]

(1) வீரன், சூரனிவன், என மேதினி மெச்சிடவே,
தீரம் உற்றவர்க்கும் அரிதாவன செய்து, பெரும்
பேரும் கீர்த்தியுமே பெறல் யார்க்கும் எளிதன்றால்;
யாரும் எய்திடலாம் எளிதொன்றை இயம்புவெனே:

(2) நாலாம் சாதி, மதம் நாலிரண்டென நாடாமே,
சாலும் செல்வமிலை எனாதுமே; தம்மாலே
ஏலும் நன்றெதுவும், தினமேயும் இயற்றிடும் ஓர்
சீலம் தேடிடுதல் சிறியோர்க்கும் எளிதாமே!

---

## XIII. மெய் உயர்வு †

விருத்தம்.

எக்குலத்தான், யாதுபெயர், என்றே கேளேன்.;
இருதயத்தில் ஆண்மையுண்டேல், அதுவே ஏற்றம்;
தக்கதனமிலை யெனின், ஓர்தாழ்வுமில்லை,
சத்திய மாண்புடைய னெனச் சாற்றுவீரேல்;
மிக்கஅவன் நாடு, வளர் தேயம், வேண்டேன்,
விழுமியதே நீரெனில், எங்குதித்தாலென்னோ?
எக்குடியில், அரமனையில், பிறந்தாலென்னோ?
இயம்புக ஈதொன்றும்: 'அவன் சீலனேயோ?'

---

* Adapted from: "*We cannot all be heroes.*"

† Adapted from *True Nobility.*

## XIV. மாருத கீதம். *

["மாதேய சோதையே" என்னும் சிந்துமெட்டு]

(1) மாநிலம எங்கும் வருந்தி அலைந்துறும்
மாருதம் ஓதுவ கேளும்:—கண
மேனும் சுகமாய் இருந்திட ஏங்கியும்,
இல்லை ஒழி வொரு நாளும்!—உங்கள்
வாழ்வாவதும் வளி*மாதிரி * காற்று
தாழாதுசஞ் சலமோதுமே— (மாநிலம்)

(2) எங்கிருந் துற்றனம், யாது பொருட்டியாம்
இங்குவந் தோமெனத் தேரீர்;—உயிர்
எங்கிருந் துற்றினி எவ்விடம் ஏகுமோ
என்பதும் ஏதுமே ஓரீர்;—என்னின்,
இருவோருமே இருபேய்களில்
திரிவோரெனில், தெரியீர்சுகம்— (மாநிலம்)

(3) வையக வாழ்வொரு மேகம், நதியென
மாறி வரு பொம்மலாட்டம்:—இதை
ஐயகோ! மக்கள் அறியாமலே மய
லாகி உழலும் திண்டாட்டம்,—எங்கள்
வழியாவுமே துயர் மேவுமே,
அழவோ, நகை யுறவோ, இனி— (மாநிலம்)

(4) மாயை மகனே! ‡ நீ ஓய்வொழிவின்றி
மகிழும் சுகங்களும் வம்பே!—உங்கள்
நேயமாம் காதல் நிலைத்திடுமே யெனில்,
நிச்சயமாய், இவை இன்பே!—ஐயோ,
ஒரு மாருதம் என மாறியே
வருமே,முடி வுறு மேயினி!— (மாநிலம்)

* Adapted from Edwin Arnold's *Light of Asia*.

‡ புத்தாவதாரமாக வந்த சித்தார்த்தனை நோக்கி.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

(5) இன்னும் உறக்கமோ? உன்வர வெண்ணியே
ஏங்குவ யாவுமே தேராய்!—பழி
துன்னும் உலகு குருடரெனவே
சுழலி இடருறல் பாராய்!—நீயும்
ரக்ஷித்திட வந்தோனெனில்
பக்ஷத்தொடுகந்தே, எழு— (மாநிலம்)

(6) ஓதுறு காலமும் உற்றதினி! விளை
யாட்டொழிந் துண்மையை வேண்டி,—பிறர்
மாதுயர் கண்டுளம் நோதலும், காதலர்
மீதுறு வாஞ்சையும் தூண்ட,—இனி,
உலகும், ஒரு நீயும், மயல்
விலகும் வழி தனை மேவுக— (மாநிலம்)

(7) கண்ணுக்கினிய நிழல்களொடும் விளை
யாடியே கண்ணயர் வாயே!—இந்த
மண்ணுக்குள் ஏதும் அறிகிலை, மைந்தனே!
மையல் துறந்தெழு வாயே!—எனப்
பாழும் வளி பரிவாகவே
யாழின்வர, இசையோதுவ— (மாநிலம்)

---

## XV இந்தியச் சிந்து.

[வர்ணமெட்டு:—"மாதேயசோதையே".]

### பல்லவி.

(1) வாரும், நம் அன்னையை, இந்தியத் தாயை
வாழ்த்தி வணங்கிடுவோமே!—அவள்
சீரை நினைந்து, நம் சிந்தையில், நாவினில்,
செய்கையில் செய்திடுவோமே!

**சரணங்கள்.**

(2) பொன் கொழித் தாயிரம் கால்களில் ஓடி, முப்
போகமும் பொங்கிடும் ஆறும்,—உல
கெங்கும் புகழவே ஓங்கும் மலைகளும்,
இங்கினும் எங்குள தேறும்;—மணி
முத்தும், பவளமும், ஆதிய
தத்தும் அலைவளம் மோதுமே— (வாரும்)

(3) கோட்டை, கோயில், மடம், கோரி, தூபி, மனம்
கொள்ளைகொள் காட்சிகள்கூடி,—இந்த
நாட்டினில் நம்மவர் நாகரீகங்களைக்
காட்டிடும் சாட்சிகள் கோடி!—புகழ்
அன்னோர்களேமுன்னோர்; இனி
என்னோ? என மனமுன்னியே— (வாரும்)

(4) ஜாவா, ஸுமத்ரா, இலங்கை, பர்மா, எல்லாம்
தம்வசம் ஆக்கிய வீரர்!—உல
கோவாதெந் நாட்டுக்கு மே,கலைஞானம்
உதவிய ஒண்மதி தீரர்!—அவர்
குணமும், மதி,வலியும், ஒரு
அணுவும் இன்னும் உடையீரெனின்— (வாரும்)

(5) ஆதியில், பூமியில், மானுடர் யாரும் அஞ்
ஞானமே மூடிய நாளே,—அவள்
ஜோதி சொரூபநி ரூபணம் ஈதெனச்
சொல்லவல் லார்கள் தந்தாளே!—அதைச்
சிந்தித்தினியேனும், நம
தந்தஸ்துயர் வாகும்படி— (வாரும்)

(6) சாதி,மத,கரு மங்களினால் வரும்
சங்கடம் யாவையும் மாறி,—இனிப்,
பேதம் இல்லாமல், ஓர் அன்னை வயிற்றில்
பிறந்தவர் நாமெனத்தேறி,—அவள்

பண்டைப் புகழ்தனை ஆக்கிடு
தொண்டைக் கடமைய தாக்கிட— (வாரும்)

(7) ஒற்றுமை அன்றியே வெற்றி தருவதும்
உண்மையில் இன்றெனப் பேணும்;—இதைக்
கற்றறி மேலையர், ஒற்றுமையால் உல
காண்டு வருவதைக் காணும்;—ஒன்று
சேரும், வருகலி நீங்கிட,
நீரும் வலிபுகழ் ஓங்கிட— (வாரும்)

(8) கல்வி,எல் லார்க்கும் சுதந்தர மாகக்
கடவுள் அருளிய சொத்தே;—அதைச்
செல்வர் தரித்திரர், ஆண்பெண், கீழ் மேல், எனச்
செப்பிடு பேதம் ஒழித்தே,—தெரு
மடம், ஆலயம், எங்கும் கலை
நடமாடி நலம் பொங்கிட— (வாரும்)

(9) பாதியில், மார்பினில், நாவினில், மாதரைப்
பன்னும் மூர்த்திகள் தாங்கி—மிக
ஆதரிப் பார்;எனும் நீதியை ஓதிடும்
ஆகம உண்மையை நீங்கி,—ஆடு
மாடோ, மடவாரோ, எனும்
மூடச்செயல் முற்றும் விடும்— (வாரும்)

(10) பெண்களை இன்றிப் புகழ் பெறுதல், நொண்டி
பெற்றிடும் கொம்புத் தேனுமே!—இரு
கண்களில் ஒன்று கலங்கிடின்,மற்றதும்
புண்படல் கண்டிடுவோமே!—அவர்
குறை நீக்கியும், அறிவாக்கியும்,
பெறு பாக்கியம் அதியோக்கியம்.— (வாரும்)

(11) ‘உழுது பிழைப்பவர் வாழ்பவர்; மற்றவர்
தொழுதவர் பின்செல்லுவோரே’—எனும்
பழுதில் சொல்விட்டு, நம் பள்ளுப்பறையைப்

பழித்துச் சதித்திடு வீரே!—இது
வீணே; அவர் எதிர் மீறிடின்,
காணீர் ஒருகதி வேறினி— (வாரும்)

(12) பொய், மது,சூது, களவிழி காமம்,
புகழ்கெடு சோம்பலும் நீங்கி,—உயர்
மெய்ம்மையும், ஆண்மையும், ஊக்கம், முயற்சியும்
மெய்ப் பொருள் ஆமெனத் தாங்கி,—நமைப்
பாழாக்கிடு பழிகேடுகள்
கீழாக்கிடு வழிதேடுவம்— (வாரும்)

(13) பல்கடல் ஓடியும், சீமைகள் நாடியும்,
பற்பல கைத்தொழில் கூடி,—எந்த
நல்வழி யாலும் பொருளையே செய்குவம்,
நாமுமே நன்று றவாடி:—பணம்
ஒன்றே பல உளவாக்கிடும்;
இன்றேல் பிறஇசைபோக்கிடும்— (வாரும்)

(14) பொம்மை விவாகம், ஆண் பெண்களை விற்குதல்,
புத்தியில்டம்பம், பொறாமை,—இளம்
கைம்மையர் தம்துயர், சாதிவிரோதம், இக்
கஷ்டம் எல்லாம் அறியாமை—என
ஆராய்ந்தினி அவைமாறியே,
சீராகிடு வகைதேறியே— (வாரும்)

(15) பிச்சை எடுத்தும், பிறரை அடுத்தும்,
கெடுத்தும் பிழைப்பதே ஈனம்;—சுய
இச்சையின் எத்தொழி லேனும் இயற்றிப்
பிழைப்பது வேபகு மானம்;—முந்து
வழியாவுமே பழியாவுறும்;
தொழிலேதினும் இழிவேயிலை— (வாரும்)

(16) காயபலமும், கடவுள் அருளிய
புத்தியும், கையில்இருக்க,—வீணில்,
மாயக் கருமம், தலைவிதி, என்றே

மறுகி, உலகும் சிரிக்க,—இனி
வாழீர்; மதிவலி மீறிய
பாழும் விதிஇலை, தேறியே— (வாரும்)

(17) நம்மை அலாது, நமக்கு விரோதிகள்
நாட்டினில் எங்குளர் காட்டும்;—இழி
பொய்ம்மை, மயக்கம், புறங்கூறல், சோம்பிவை
போக்கிப் புகழையே நாட்டும்;—இனி
ஏதென்றாலும் மனஏக்கமும்
போதும்; எழும்! பயம் நீக்கிடும்— (வாரும்)

(18) தாதா, இரானடே, ராம்மோஹன்ராய், காந்தி,
தாகூர், போஸ், கோக்லே, நௌரோஜி,—உயர்
மேதாவி மார்கள் அடிவழிப் பட்டுஇனி
மேன்மை விளைக்குதல் நீதி;—இடர்
விட்டோம்! ஒருப் பட்டோம்! மிக
நட்டோம்! இழிவொட்டோம்! என— (வாரும்)

(19) அன்னையே! மாதவர், மேதையர், வீரர்,பல்
ஆயிரர் தந்தவள் நீயே!—இனி
உன்னையே பேணி, உன் தொல்புகழ் தன்னில்
உயர்த்திடோம் என்னில் எம்தாயே!—யாமும்
மிருகங்களின் மிக வீனர்கள்;
சரதம்! என விருதோதியே— (வாரும்)

---

## XV "ஊக்கமது கைவிடேல்" *

["பாளைவாய்க் கமுகு" என்னும் காவடிச் சிந்துமெட்டு.]

(1) வாய்க்குமினிக் காற்றெனவே நோக்கியே, கணக்களுற்று
வறிதிருத்தல் தானுமொரு யுத்தியோ?—படவைச்
சிறிதெனுமே தள்ளுதலே புத்தியே!

---

* Adapted from Mrs Southey's *Never say fail.*

(2) வாழ்க்கை யென்னும் போர்க்களத்தில், தோற்கையாமென்றே
க்கமுற்றே
தாழ்க்குறுமல், மேற்கதிக்கும் வீரரோ—சய
பாக்கியங்கள் ஆக்கிமகிழ் தீரரே!

(3) என்றும் விழிப்பாயிருப்போன், ஒன்றுவன நன்றுரைப்போன்,
கன்றிமனம் நொந்துமே களைத்திலான்,—என்னின்,
வென்றிடுவன் மிக்கபோர் விளைத்துமே.

(4) ஆதலின்நீ ஓய்தலின்றி, யாதுறினும் சாய்தலின்றி,
நாலுபேர் சொல் நாலைமதி யாமலே—மேலும்
மேலும் நித்தம் செல்லுவாய்வி டாமலே!

(5)• ஊக்கமட்டும் உற்றவனேல் தாக்குபடை தடைகளென்னும்?
பாக்கியங் கொள்வாழ்க்கையில் தீதோ, நன்றே,—எது
வாய்க்கினும் ஜயம்தரும் ஊக்கம் ஒன்றே.

---

## XVI. திருக்குறள் மஞ்சரி.

(முதற்பாகம்.)

[தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.]

**பல்லவி.**

கற்றுமே மூடர்கள் காணீர்!—கல்வி
பெற்றிடு துன்புகள் உற்றும் பெரிதே— (கற்று)

**சரணங்கள்.**

(1) அகர முதல எழுத்தே;—ஆதி
பகவன் முதல துலகெனல்' பார்த்தும்,
தம்வலி கொண்டு தருக்கிப்—பல
வெம்மை விளைத்து விளக நினைப்போர்— (கற்று)

(2) 'அந்தணர் எனபோர் அறவோர்:—யார்க்கும்
செந்தண்மை* பூணலின்' என்பது தேர்ந்தும்,
தந்நயம் எண்ணித், தளர்ந்தோர்—தமக்
கின்னல் ‡ இயற்றும் இருபிறப்பாளர்— (கற்று)

(3) 'மனத்துக்கண் மாசில னாதல்—ஒன்
றனைத்தறன் ஆக்கிடும்' என்ப தறிந்தும்,
நெஞ்சறி குற்றம் நிதமே—செய்ய
அஞ்சில ராயும், அறமே நடிப்போர்— (கற்று)

(4) 'அன்பிலர் யாரும் தமக்கே;—உள்ளோர்
என்பும் உரியர் பிறர்க்கெனல்' கண்டும்,
சத்தி, புத்தி, தனமின்றி—மிகத்
தத்தளிப் போர்க்குத் தயவிலா மக்கள்— (கற்று)

(5) 'அன்பின் வழிய துயிரே—பிற
என்புதோல் போர்த்த உடம்பெனல்' ஓர்ந்தும்
மன்பதை துன்பின் மறுக,—மன
வன்பின் அணுவும் இளகிடா மக்கள்— (கற்று)

(6) 'இனிய உளவாக, இன்னா—கூறல்
கனியொழித் துக்காய் கவர்தலிற்' கண்டும்
இஞ்சியைத் தின்ற குரங்கின்—இழி
வெஞ்சொலே என்றும் விளம்பிடும் மக்கள்— (கற்று)

(7) 'எந்நன்றி கொன்றாரும் உய்வர்—உய்யார்
செய்ந்நன்றி கொன்றவர்' என்று தெளிந்தும்,
நன்றியை நாளும் மறந்து—மனம்
குன்றிப் பொறாமையே கொண்டிடும் மக்கள்— (கற்று)

(8) 'சமன் செயுங் கோலெனச் சாயா—தென்றும்
அமைவதே சான்றோர்க் கணி'என் றறிந்தும்,
பக்ஷபா தங்கள் பகர்ந்தே—ஒரு
கக்ஷியைச் சாரும் கசடர்கள் என்றும்.— (கற்று)

---

*அருள். ‡ துன்பம்.

(9) 'யாகாவா ராயினும் காக்க—நாவைச்,
சோகாப்பர் அன்றெனிற் சொல்லிழுக் குற்றே'
என்ற சொற் கண்டும், எளிதாய்ப்—பிறர்
கன்றிட நாவினில் வந்த கரைவோர்— (கற்று)

(10) 'தீயினுற் சுட்ட புண்தீரும்;என்றும்
ஓயாது நாவின் வடு'எனல் ஓர்ந்தும்,
தம்மதம் கொண்டு தருக்கி—கொடும்
வெம்மை உரைகள் விளம்பிடு மக்கள்— (கற்று)

(11) 'ஒழுக்கம் உடையவர்க் கில்லை—நா
வழுக்கியும் தீய வழங்கல்'என் றோர்ந்தும்,
தூய ஒழுக்கமே சோர—உரை
தீய வழங்கும் சிறிய பெரியோர்— (கற்று)

(12) 'ஒழுக்கம் சிறப்பை உதவும்—இனி
ஒழுக்கத்தை ஓம்பும் உயிரில் உயர்வாய்',
என்ப தறிந்துமே, என்றும்—இன்ப
துன்பமே நாடிப், பணமே தொழுவோர்— (கற்று)

(13) 'சாத்திர நீதியில் தக்க—வான
மாத்திரம் கைக்கொண்டு, மற்றவை நீக்கிச்
சொல்லாத நன்மையும் துன்னி,—உயர்
நல்லாரொ டொக்க நடவாத' கற்றோர்— (கற்று)

(14) 'பிறன்மனை நோக்கிடா ஆண்மை—சான்றோர்க்
கறனென்றோ, ஆன்ற ஒழுக்கெ'ன் றறிந்தும்,
'அறமும் பொருளும் இழந்தே—அச்சம்
உறுதலில் இன்பும் ஒழிய'ப் பிழைப்போர்— (கற்று)

(15) 'ஒறுத்தார்க் கொருநாளை இன்பே—பிழை
பொறுத்தார்க்குப் பொன்றுந்துணை புகழ்' கண்டும்,
தன்னைக்கடித்திட்ட நாயை—தானும்
பின்னைக் கடித்திடும் பெற்றியிற் காய்வோர்— (கற்று)

(16) 'இன்னா செய்தாரை ஒறுக்க—என்றும்
நன்னயம் அன்னவர் நாணிடச் செய்க;'
'மிகுதியால் மிக்கச்செய்தாரைத், தாம், தம்
தகுதியால் வெல்க' எனுமுறை சாரார்— (கற்று)

(17) 'அழுக்கா றெ*ன ஒருபாவி—திரு
அழித்து நரகிற் புகுத்தல்' அறிந்தும்,
மற்றவர் மாட்சிமைகாண—மனம்
சற்றும் பொறாமல் தழலுற் றெரிவோர்— (கற்று)

(18) 'நுண்ணிய பேறி வெண்ணும்—பொருள்
நண்ணிட நன்றல செய்யின்?' என்றோர்ந்தும்,
கையின், மதியின், கதத்தால்—பிறர்
நையப் பொருளை நசைந்து பறிப்போர்— (கற்று)

(19) 'நாளுமே பாவம்செய்தாலும்—என்றும்
கோளுரை யாதல் இனி தெனல்' கொள்ளார்,
குண்டுணி நாரதர் கூசப்—பல
கண்ட காணாதன கொண்டுரைப் போர்கள்— (கற்று)

(20) 'மற்றவர் குற்றமே காணும்—வண்ணம்
உற்றதம் குற்றமும் காணின், உயிர்க்கே
தீதிலை' என்பது தேர்ந்தும்—இரு
போதும் பிறரையே நிந்தை புரிவோர்— (கற்று)

(21) 'மிகவே பயனில சொல்வோன்—ஓர்
மகனல, மக்கட் பதடி' என் றோர்ந்தும்,
வாழ்வுமே பாழுற வம்பைப்—பல
நாழி மரக்காலில் நாளும் அளப்போர்— (கற்று)

(22) 'மறந்தும்பிறன் கேடு சூழில்—நல்
அறம்தமை யேகெடுக்கும்' என்றறிந்தும்,
ஏனையர் கேட்டினை எண்ணித்—தாமே
வானுயர் மாட்சியில் வாழ நினைப்போர்— (கற்று)

---

* பொறாமை

(23) ‘ தந்நயம் காதலித் தோர்கள்—பிறர்க்
இன்னல் இயற்றின் இழப்பத’ றிந்தும்,
வீட்டில் எலிப்பகை வெல்லத்—தீயை
மோட்டினில் மூட்டியே முற்றும் இழப்போர்— (கற்று)

(24) ‘ ஒத்த தறிவாரே வாழ்வார்—மற்றோர்
செத்தாருள் வைக்கப் படுதல்’ தெரிந்தும்,
தந்நயம் தன்னையே பேணிப்—பல
நன்னயம் ஒப்புர வில்நய வாதார்— (கற்று)

(25) ‘ தோன்றிற் புகழொடு தோன்றும்—அன்றித்
தோன்றலில் தோன்றாமை நன்றெனல்’ தேர்ந்தும்,
நண்ணிப் புகழையே நாடா—திங்கு
மண்ணொடு மண்ணுக வாழ்ந்துயிர் மாய்வார்— (கற்று)

(26) ‘அருளே உயர் செல்வம் ஆதல்—பிற
பொருளெல்லாம் கீழோரும் பூணுதல்’ கண்டும்,
பொருளைப் பெரிதெனப் போற்றி—என்றும்
அருளை இளையா தகங்கரிப்போர்கள்— (கற்று)

(27) ‘ வலியார்முன் தன்னை நினைக்க—தன்னின்
மெலியார் மேல்தான் செல்லும் வேளை’ என்றோர்ந்தும்,
தம்முயர் வெண்ணித் தருக்கிப்—பிறர்
விம்மி வருந்திட வெம்மை விளைப்போர்— (கற்று)

(28) ‘ மற்றோ ருயிர்வதை யானேல்—மிகப்
பெற்றிடும் ஆயிரம் யாகத்தின் பேறே’
என்றுமே, தேகம் இளைக்கும்—எனக்
கொன்றுதின் றேகொழுப் பெய்தும் சொடியோர்—(கற்று)

(29) ‘எல்லா உயிரும் தொழுமே—என்றும்
கொல்லாத வன்றனை’ என்னுரை கொண்டும்,
வேட்டையும் ஊட்டையும் வேட்டு,—முள்ளுக்
காட்டிலும் சென்று கலக்கி வதைப்போர்— (கற்று)

(30) ‘வஞ்சக நெஞ்ச மனத்தான்—தனை
அஞ்சும் சிரிக்கும் அகத்தெனல்’ கண்டும்,
ஆஷாட பூதிகள் ஆகி—நய
வேஷங்கள் பூண்டு மிரட்டித் திரிவோர்— (கற்று)

(31) ‘வானுயர் தோற்றமென் செய்யும்—நெஞ்சம்
தானறி குற்றப் படின்’எனல் சார்ந்தும்,
மேன்மையாம் தானத்தை மேவி—இழி
பான்மையிற் பாவம் பழிகள் படைப்போர் (கற்று)

(32) ‘பழித்த தொழித்துவிட் டோர்க்கு—முடி
மழித்தலும் நீட்டலும் வேண்டா’தறிந்தும்,
மடாதி பதிகள் எனவே—மிக்
கடாதன செய்தே அவம்புரி வோர்கள் (கற்று)

(33) ‘கள்ளத்தால் ஆக்கம் கழியும்—அதை
உள்ளினும் தீதெனல்’ ஓர்ந்துமே, மற்றோர்
தம்பொருள் தன்னை விரும்பி—இந்த
அம்புவி யிற்கள வாதிகள் செய்வோர்— (கற்று)

(34) ‘தன்னெஞ் சறிவது பொய்யேல்;—பொய்க்கின்
தன்னெஞ்சே தன்னைச் சுடுமெனல் சார்ந்தும்
சின்னஞ்சிறிய செயற்கும்—மிக
வன்னெஞ்சர் ஆகியே மெய்யை மறைப்போர்— (கற்று)

(35) ‘பொய்யாமை என்றுமே போற்றின்—பிற
செய்யாமை யால்தளர் வின்றெனல்’ தேர்ந்தும்,
தம்மைச் சுடவரும் நெஞ்சைத்—தக்க
பொய்ம்மை புரட்டால் மயக்கியே பொய்ப்போர்-(கற்று)

(36) ‘வாய்மையின் மிக்க அறத்தை—மிக
ஆய்ந்தபன் னூலில் அறிந்திலெ னென்று’
தெய்வப் புலவரே செப்ப—பின்னும்
பொய்யை நிதமும் புகன்றிடு வோர்கள்— (கற்று)

(37) 'செல்லிடத் துச்சினம் காக்க—மற்றும்
அல்லிடம் காப்பதவ' மென்றறிந்தும்,
வலியாரை வாழ்த்தி வணங்கி—தம்மின்
மெலியாரைத் தம்சினம் மேலிட்டொறுப்போர்—(கற்று)

(38) 'தாங்கெட அஞ்சுவோர் தாமே—பிறர்க்
கேன்கெடு தீங்கு நினைக்கின்றார்?' என்றே
ஓங்கு வினையை உணர்ந்தும்—மதி
நீங்கினோ ரிற், பிறர் தீங்கை நினைப்போர்— (கற்று)

(39) 'நாச்செற்று விக்குள் வருமுன்—வினை
மேற்சென்று நன்மை விளைக்க' என் றோர்ந்தும்
நித்திய ரென்று நினைத்தே—செயற்
கொத்ததோர் நன்றில் உழைத்திடாமக்கள்— (கற்று)

(40) 'இன்பம் இடையறா தீண்டும்—அவாத்
துன்பத்துட் துன்பம் துடைக்கின்' என்றோர்ந்தும்,
பேராசை கொண்டு பிழைத்தே—பழி
தேராது செல்வங்கள் தேடிடுமக்கள்— (கற்று)

(41) 'நன்றினை நல்லவாக் கொள்வோர்—நலம்
அன்றினுக் கல்லற் படுவதென்?' என்றே
ஓதியும், நன்றை ஒழித்தே—பல
தீதையும் செய்யும் தெளிவில்லா மக்கள்— (கற்று)

(42) 'கற்க கசடறக் கற்ப;—பின்பு
நிற்க அதற்குத் தக' என்னும் நீதிப்
பாட்டை மறந்து, பழுதே—கல்வி
ஏட்டுச் சுரைக்காய் எனவே நடப்போர்— (கற்று)

(43) 'ஈன்றாள் பசிக்கினும் செய்யேல்—இசை
ஆன்றோர் பழிக்கும் வினை' எனல் ஆய்ந்தும்,
தஞ்சாண் வயிற்றையே தாங்க—யாரும்
அஞ்சிப் பழிப்பன அஞ்சாது செய்வோர்— (கற்று)

---

## XVII. தாய்நாட்டு வணக்கம்.

இராகம்:—எதுகுலகாம்போதி. தாளம்-திரிபுடை

[வர்ணமெட்டு:— "ஒருநாள் மருவிய".]

பல்லவி.

இந்தியா மாதாவின் சுந்தர பாதங்கள்
இறைஞ்சிடுவோம் வாருமே!

அநுபல்லவி.

சந்ததம் நமையெல்லாம் சொந்தமாய்த் தாங்கியே
தந்தை, தாய், தமர், தெய்வம், தாரகம், தானே யாகும்— (இந்)

சரணங்கள்.

(1) புண்ய மலை நதிகள், கண்ய கோவில் பதிகள்,
பண்ணும் பல தொழில்கள், எண்ணும்கலை யெழில்கள்,
நன்மணியாதிய நன்மைகள்மேவிய
பொன்னகர் போலிய புன்மையில் பூமியை,
சூரர், சொல்லரிய வீரர், வெல்லரிய
தீரர், நல்லகுண ஆரிய நாரியர்,
சத்தியமேஜய மென்றவர், மாதரு
மத்தினையேஜய மென்றவர் தாயெனும்—(இந்)

(2) கொல்லர் தெருவில் ஊசி கூறி, விலைகள் பேசி,
இல்லை திறமை சீ! சீ! என்றே நமையுமேசி,
மேட்டிமை இன்று விளம்பிடுமேலையர்
காட்டினராக அலைந்திடு காலையில்,
வித்தை முற்றி, உல கத்தனைக்குமுயர்
புத்தியிற் பெரிய சத்குருவேயென,
நாகரீகங்களின் நாற்றங்காலென,
ஏகமாதாயிவை பாக்யதாயெனும்—(இந்)

(3) வேத, புராண, இதி   காச, தரும, நீதி,
ஆதிய முதல் விதி   யாகவோதிடுமதி
உத்தம மாதுரு   பக்தியே யாதலின்,
நித்தியமாய், மன   மொத்தவராயினி,
முயலை யன்றி யொரு   செயலுமில்லை; வரு
பயனுமில்லை; தரும்   ஐயமும் அதே யென;
பல கடலோடியும்,   இலபொருள் தேடியும்,
நலபுகழ் நாடியும்,   நாளும், நம் தாயெனும்—(இங்)

(4) சாதிசமயாசாரம்   ஓதி என் உபகாரம்?
போதுமிவ்வரிதாரம்!   வாதுகளுக்கே சாரம்;
அன்னை ஒருத்தி   வயிற்றில் உதித்தவர்
என்ன நினைத்து,   நலத்தைமதித்தினி,
தத்தமக்குரிய   உத்தமக்கடமை
எத்திறத்தினிலும்   சித்திபயந்திட,
ஆரியத்ராவிட   தர்மம் அனைத்தினும்
சீரியவான   தெளிந்து நம் தாயெனும்—(இங்)

(5) எளியாரை ஏற்றியும்,   தெளியாரைதேற்றியும்,
களிசூது மாற்றியும்,   ஒளிபுகழ் போற்றியும்,
பாலரை நன்று   பயிற்றியும், மாதரை
நாலுறுபண்பின்   நவிற்றியும், மேதையர்
சொற்படிக்கொழுகி   சிற்ப கைத்தொழில்கள்
முற்படிப்பெருகி   பொற்புறஓங்கிட,
கேண்மை பிறந்திட,   கீழ்மையகன்றிட,
ஆண்மைசிறந்திட,   அம்மைமகிழ்ந்திட—(இங்)

(6) சம்பத்துளோர் கொடுமின்;   வம்புச் சொலும் விடுமின்;
டம்பச்செல வொழிமின்;   பண்புற்றதேமொழிமின்;
கைம்மையர் தம்மையும்   செம்மையுறத்துமின்;
பொம்மை விவாகமும்   நம்முள் நிறுத்துமின்;
ஜோதி மேனியிலும்   பாதியாகும் உயர்
நீதி புன்னி, மட   மாதரை ஏற்றுமின்;

கேடுளபழையன போடுமின்; புதியன
நாடு மின்; விழுமிய கூடு மின்; நாளும் நம்—(இங்)

(7) செல்வக்கோயில் மடத்தே கல்விச்சாலை யெடுத்தே
கொல் மடமை கெடுத்தே, பல்தொழிலும் அடுத்தே,
ஓதியுணர்ந்து, வி ரோதமொழிந்து, ச
கோதரரென்ன, ம னோத மன்னிட,
நற்றவத்தினர்கள் பெற்றுவிட்டநமை
உற்ற கஷ்டமெலாம் சிற்றறிவாலெனும்
நீதி அறிந்ததை நீக்கி, அம்மாதவர்
பாதம் நினைந்து, பணிந்து மகிழ்ந்து நம்—(இங்)

---

## XVIII வாழ்க்கை மாண்பு.*

[" மாதேய சோதையே" என்னும் சிந்து மெட்டு]

தேம்பி,இவ் வாழ்வொரு வீண்கன வென்னவே
செப்புவ தொப்பிலேன் ஐயா!—அதிற்
சோம்பித் துயில்பவர் துஞ்சினோ ரே;வெளித்
தோற்றமும் யாவுமே மெய்யா?—பலன்
மேவி விளங்கும்இவ் வாழ்வுமெய் யே;அது
சாவினொ டும்முடி வாமோ?—வாழ்க்கை
ஆவது மாயம், மண்ணாவது மெய்யெனல்,
ஆவியைக் கூறிய தாமோ?— யாரும்,
இன்றினும் நாளைச் சிறப்புயர் வெய்திடற்
கேற்ற ஒழுக்கமே காணீர்—நமக்
கொன்றிய தாகும்;மற் றின்புதுன் புன்னி
ஒழுகுதல் அன்றிது பேணீர்!—வளர்
'கல்வி கரையில, கற்பவர் நாள்சில';
காய மனவலி யோரும்,—மெல்லச்

* Adapted from Longfellow's *Psalm of Life.*

செல்வதன் றி,யமன் வீட்டினுக் கே,சிறு
சிவிகள் இல்லையே யாரும்;—இந்த
மாநில வாழ்க்கையாம் மண்டுபோ ரில்,—உயிர்
காக்கும் அமர்க்களத் துள்ளே,—வாயில்
ஆநிரை போலிழி வாயலை யாமலே,
ஆண்மக னும்பெயர் கொள்வீர்!—முன்பு
சென்றன வாற்பய னில்லை; நிகழ்வன
சேரும் இனியெனல் வீணே,—என,
இன்றே கடவுள் அறியச், சிறக்கவே
ஏய்வன செய்திசை பேணீர்!—முன்னைச்
சீரிய சிலர்கள் நல்வழிச் சென்று,நாம்
சென்ம பலனுற லாமே!—இந்தப்
பாரிலே, காலமாம் பாதையிலே, நம்
பதச்சுவ டும்பதி வாமே!—பின்றை
நாளில், ஒருத்தன், நலமிழந் தேங்கியே
நல்வழி விட்டலை வானும்—போது,
கோளில்நம் பாதக் குறிகளைக் கண்டவை
கொண்டு பிழைத்தலு மாகும்!—இதைத்
தேறி, எதற்கும் துணிந்திடை யின்றியே
செய்வன செய்திடு வோமே!—உறும்
பேறுகள் தாழ்க்கினும், ஊக்கம் விடாமற்
பெரியவே பேணிடு வோமே!

---

## XIX. நல்லது கூறல் *

இராகம்-நாதநாமகிரியை. தாளம்-ஆதி.

[" நினைப்பதெப்போது நெஞ்சே " என்னும் மெட்டு]

பல்லவி

நல்லதையே சொல்லுமே!—ஏதேனும் ஒன்று— (நல்ல)

---

* Adapted from J. W. Riley's *Let something good be said.*

**சரணங்கள்**

(1) பழி ஒருவனையுறும் பொழுதினில், ஈரடி
நழுவுரை, நியாயங்கள், மொழிகுதல் ஒழிந்தே— (நல்ல)

(2) அன்பினால் இளக்கொணா வன்புசேர் இழிமக்கள்
இன்புவி தனிலில்லை, என்பதை நினைந்தே— (நல்ல)

(3) மானம் அழிந்தே, இழி வானவகை பிழைக்கும்
ஈனரும், மனத்துள்நோ தானுறல் நினைந்தே— (நல்ல)

(4) அம்புகழ் அழிந்திட நம் பெயர்க்கொருபழி
பம்புற, நம்மனம் வெம்புதல் நினைந்தே— (நல்ல)

---

## *XX. விண்ணப்பப்பதிகம்.

[“பித்தா பிறைசூடி” என்னும் தேவாரமெட்டு]

(1) இறைவா! உனை வேண்டேம் எமதிருள் நீக்கிடும் ஒளியே;
மறைவாய் விழி போர்க்கும் திரை வாங்கும்படி வேண்டேம்;
முறையே திருக்கருத்தின் வழி முதிரும் எமதாக்கம்
நெறிமாறிட, விரைவாகிட, நேராயென வேண்டேம்;

(2) என்னென்ன விதத்தாலெமை ஏற்றம் இனி எய்தும்;
அன்னன்னவை முன்னம் இவண் அறிவான் உனை வேண்டேம்;
மன்னும் உயிர் வாழ்வில் விதி வசத்தால், வளர் பொழுதால்,
துன்னும் பலதுனி சேர் விடர் தொலையாவென வேண்டேம்;

(3) பல சங்கட முற்றும் பயமிலராய்ப், பயப் பய யாம்
செலுமிவ்வழிமுடி வீதெனத் தெளிவான் உனை வேண்டேம்;
நலமொன்றியாம் இயற்றும் தினை நன்மை பனைத்துணையாய்
இலகும்படி, மிகவே பலன் ஈயும்படி வேண்டேம்;

---

* Adapted from *A Prayer* by John Drinkwater in the *Spectator*.

(4) வேண்டேம் இவை. இறைவா! எமைச்சூழும் சிறுவேலி
தாண்டேம் ஒருபொழுதும்; உனதாணைக்குறிதவிரேம்;
காண்டற்குரியன வன்றி, நீகரக்கும் பொருள் கருதேம்;
யாண்டாயினும் அடைவேம் உனதருளாலென அறிவேம்;

(5) எப்போதெதை இயற்றல் நலம், தவிரல் நலம், என யாம்
முப்போதையும் உணர்ந்தே வினை முடிக்கும் வகை முயலேம்;
தப்பேதுமோர் பொழுதும் எமைச்சாராத்தகவளிக்கும்
ஒப்பேதுமில் ஞானந்தனை உதவாயென வேண்டேம்:

(6) இவை வேண்டிலேம், இறைவா! உனதருளால் இவை அறிவேம்
புவியில் வளம் பொலிந்தே மிகவிளையும் பலபொருளின்
சவலங்களை அடைதற்குழும் தருணங்களை அறிவேம்;
கவலின்றியே களைப்பாறிடும் காலத்தையும் அறிவேம்;

(7) குறியேம் இவை. கமலம் இது, குருக்கிதென அறிவேம்;
மறுவேது மில் புனிதம்இது, மாசிதென அறிவேம்;
நிறைமாண்பிது, பழியீதென அறிவேம்; நிருமலமாய்க்
குறையாதொளிர் மெய்ம்மைதனைக் கோளுடினும் அறிவேம்;

(8) தினமாகவே செல்லும்திசை, நெறியாவையும் தெரிவேம்;
உனதாக்கினையாவும் எமதுள்ளத்திடை ஒளிரும்;
எனினும், இறைவா! உன் சரண், எளியே மிசை இரங்காய்!
சொன இன்னவை தமின்மிக்கதொன்றுதவாய், அருள்சுரந்தே!

(9) நெஞ்சின் அறிமெய்யின்நெறி நிற்கும் நினைவருள்வாய்!
வஞ்சமின்றி, மனமாரவே உனழைக்கும்வலி அருள்வாய்!
அஞ்சல் அயர்விலராய், அடலாண்மை சிறந்தவராய்,
மிஞ்சும் வினையெதையும் நிறைவேற்றும் மிடல்அருள்வாய்!

(10) அறிவின்றருளென வேண்டிலேம், அறிவுண்டுனதருளால்;
இறைவா! எமதறிவின்படி இயற்றும் மனவலியே
குறையிற் பெருங்குறையாம்: உளக்கொள்கைப்படி எதுவும்
நிறைவெய்திட நிகழ்த்தும் வலி நிமிருஞ்செயல் அருளே!

## XXI. வாழ்த்து.

### பல்லவி.

வாழ்க, வாழ்க, என்றும் நன்று இந்தியா வாழ்கவே!
மங்க ளங் கொள் எங்கள் துங்க மாதா வாழ்கவே!

### சரணங்கள்.

(1) திங்கள் பங்க யன் திகழ்ந்தி லங்கும் ஊழியே
இந்து மங்கி டாதி லங்கி, இந்தியா வாழ்கவே!
மங்க ளங்கள், இங்கி தங்கள், கங்கில் பொங்கவே,
சங்கை யில்ச னங்கள் தங்கள் அன்னை வாழ்கவே! (வாழ்க)

(2) இன்மை யின்றி, துன்மனத்து வன்மம் இன்றியே,
தன்மம், நன்மை, தொன்மை பொன்று தன்மை ஒன்றவே,
பொன்ம கள்பொ லிந்து வாழ, புன்மை தாழவே,
மன்ம கிழ்ந்த ளிக்க, எங்கள் அம்மை வாழ்கவே! (வாழ்க)

(3) குறையில் மூன்று பத்து மூன்று கோடி தேவரே
நிறையும் இன்பலோகம் வாழும் நேர்மை மேவியே,
தறையில் யாம் களித்து வாழ மாறு தாங்குமால்
இறைவன் ஜார்ஜும் வாழ்க, யாமும் வாழ்க, வாழ்கவே (வாழ்க)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.